THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA

# SUGGESTED SOLUTIONS

NOT FOR SALE

## KE3(B)-Fundamentals of Law

## March 2019

All Rights Reserved

# பிரிவு 01

**விடை 01**

1.1

| கற்கை வெளிப்பாடு: 1.2.1 |
|---|
| **சரியான விடை : D** |

1.2

| கற்கை வெளிப்பாடு : 2.6.1 |
|---|
| **சரியான விடை : C** |

1.3

| கற்கை வெளிப்பாடு : 2.3.1 |
|---|
| **சரியான விடை : D** |

1.4

| கற்கை வெளிப்பாடு : 3.2.1 மற்றும் 3.3.1 |
|---|
| **சரியான விடை : C** |

1.5

| கற்கை வெளிப்பாடு : 4.3.1 |
|---|
| **சரியான விடை : A** |

1.6

| கற்கை வெளிப்பாடு : 5.4.1. |
|---|
| **சரியான விடை : B** |

1.7

| கற்கை வெளிப்பாடு : 5.7.6 |
|---|
| **சரியான விடை : B** |

1.8

| கற்கை வெளிப்பாடு : 7.1.1 |
|---|
| **சரியான விடை : A** |

1.9

| கற்கை வெளிப்பாடு : 7.1.1 |
|---|
| **சரியான விடை : D** |

1.10

| கற்கை வெளிப்பாடு : 8.2.1 |
|---|
| **சரியான விடை: D** |

**( மொத்தம்: 20 புள்ளிகள்)**

NOT FOR SALE

# பிரிவு 2

**விடை 02**

2.1

| கற்கை வெளிப்பாடு: 1.1.1 |
|---|
| சட்டவாக்கம் (Legislation):<br>• **பாராளுமன்றத்தால்** (ஆக்கப்பட்ட சட்டங்களை) அங்கீகரிக்கப்பட்ட சட்டங்கள் அல்லது ஒழுங்குவிதிகளை குறிக்கின்றது.<br>• இது இயற்றப்பட்ட சட்டம் **(enacted law) அல்லது நியதிச் சட்டம் (statute law)** எனவும் அழைக்கப்படும்.<br>• **“கையளிக்கப்பட்ட அல்லது கீழ்மட்ட சட்டவாக்கங்களை உள்ளடக்கும்”** (இவை பாராளுமன்றம் அதிகாரமளித்த உள்ளூராட்சி அமைப்புக்களால் தயாரிக்கப்படும் .ரண்டாந்தரச் சட்டம் (by-laws) ஒழுங்குவிதிகள் (regulations), கட்டளைகள் (orders) போன்றவை ஆகும்.) |

2.2

| கற்கை வெளிப்பாடு: 2.5.1 |
|---|
| ஒப்பந்த முறிவொன்றில் தவறுசெய்யாத தரப்பினருக்கு கிடைக்கும் நிவாரணங்கள் கீழ்வருமாறு:<br><br>1. மேலும் செயற்பாட்டினை மேற்கொள்ள மறுத்தல்<br>2. நட்டஈட்டினை **(damages)** கோருதல்<br>3. அளவின் அடிப்படையில் **(quantum meruit)** வழக்கு தாக்கல் செய்தல்.<br>4. குறித்த செயற்பாட்டினை **(specific performance)** மேற்கொள்ளுமாறு வழக்கு தாக்கல் செய்தல்<br>5. இடைக்கால தடையுத்தரவு **(injunction)** கோரி வழக்கு தாக்கல் செய்தல்<br>6. நேர்மையற்ற பயன்பெறுதல் தத்துவத்தின் கீழ் **(principle of unjust enrichment)** நிவாரணம் பெறுதல்.<br>7. ஒப்பந்தத்தினை இரத்துச் செய்தல் **(repudiate)**<br>8. ஒப்பந்த முறிவு செய்தவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் |

2.3

| கற்கை வெளிப்பாடு: 3.4.1 |
|---|
| 1896 ஆண்டின் 11 ஆம் இலக்க பொருட்கள் விற்பனை ஒழுங்குச் சட்டத்தின் கீழ் பொருட்களின் உரிமை தொடர்பில் கீழ்வரும் கட்டுறுப்புக்கள் இந்த ஒப்பந்தத்தில் உட்கிடையானவை.<br><br>1. விற்பனையாளர் விற்பகும் உரிமையை கொண்டுள்ளார் எனும் உட்கிடையான நிபந்தனை.<br>2. வாங்குனர் பொருளின் வைத்திருந்து பயன்பெறுதலை அனுபவிக்கும் உட்கிடையான உத்தரவாதம்.<br>3. ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட முன்னர் கொள்வனவாளருக்கு தெரியாது பொருள்மீது எதுவித அறவீடுகளோ பொறுப்புக்களோ இல்லையெனும் உட்கிடையான உத்தரவாதம். |

NOT FOR SALE

2.4

| கற்கை வெளிப்பாடு: 4.2.1 |
|---|
| 1927 ஆண்டின் 25 ஆம் இலக்க மாற்றுண்டியல் ஒழுங்குச் சட்டத்தின்கீழ் புறக்குறிப்பிடலொன்று வலிதாகுவதற்கு கீழ்வரும் தேவைப்பாடுகள் நிறைவு செய்யப்பட வேண்டும்:<br><br>• புறக்குறிப்பு உண்டியலிலேயே எழுதப்பட்டு புறக்குறிப்பிடுனரால் கையொப்பம் இடப்பட வேண்டும்.<br>• இது முழு உண்டியலுக்குமான புறக்குறிப்பிடுதலாக இருத்தல் வேண்டும். (அதாவது, முழு உண்டியல் தொகைக்குமான புறக்குறிப்பாக இருத்தல் வேண்டும்.)<br><br>• கைமாறற்தகு சாதனம் இரண்டு அல்லது மேற்பட்ட பெறுனர்களுக்கு அல்லது புறக்குறிப்பு இடப்படுபவர்களுக்கு செலுத்தப்பட வேண்டியதாயின், புறக்குறிப்பிடுபவர் ஏனைய எல்லோர் சார்பிலும் புறக்குறிப்பிடும் அதிகாரத்தை கொண்டிருந்தாலன்றி, சகலரும் புறக்குறிப்பிடுதல் வேண்டும். |

2.5

| கற்கை வெளிப்பாடு: 8.2.1 |
|---|
| 2006 ஆண்டின் 19 ஆம் இலக்க இலத்திரனிய ஊடுசெயல் சட்டத்தின் கீழ் இலத்திரனிய ஆவணம் சட்டரீதியான ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு, அது கீழ்வரும் அம்சங்களை கொண்டிருக்க வேண்டும்:<br><br>1. பின்னர் பார்ப்பதற்கு (subsequent reference) கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.<br>2. ஆவணத்தின் உள்ளடக்கத்தின் ஒருமைப்பாடு பற்றி நியாயமான உறுதிப்பாடு இருத்தல் வேண்டும்.<br>3. தரவினை தயாரித்தவரும், கிடைக்கப்பெறுனரும் (origin and destination of the data) இனங்காணக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.<br>4. ஆவணம் அது பிறப்பாக்கப்பட்ட வடிவத்தில் அல்லது பிறப்பிக்கப்பட்ட தகவல்களை செம்மையாக பிரதிபலிக்கும் வடிவத்தில் வைத்திருக்கப்பட வேண்டும்.<br>5. ஆவணத்தில் இலத்திரனிய கையொப்பம் இருத்தல் வேண்டும். |

**(மொத்தம் :10 புள்ளிகள்)**

NOT FOR SALE

# பிரிவு 2

**விடை 03**

(a)

| கற்கை வெளிப்பாடு: 2.1.1 |
|---|

தரப்பட்ட சந்தர்ப்பத்தில் யமுவினால் (Y) மேற்கொள்ளப்பட்ட வலிதான கொடைமுனைவு உள்ளது. Y மற்றும் கமுவுக்கு (K) இடையில் வலிதான ஒப்பந்தம் ஏற்படுவதற்கு K யினால் இந்தக் கொடை முனைவின் வலிதான ஏற்பு இடம்பெற்றிருக்க வேண்டும்.
ஆனால், கொடைமுனைவு Y யினால் இரத்துச்செய்யப்பட முன்னதாக ஏற்பினை மேற்கொள்ள வேண்டும்.

கொடைமுனைவு இரத்துச் செய்யப்பட்டதனை K நம்பகமான ஊடகமான புதினப்பத்திரிகை மூலமாக தெரிந்திருந்தார்.

மேலும், கொடைமுனைவினை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிவரை திறந்துவைத்திருப்பதாக கூறியிருப்பினும், கொடைமுனைவு ஏற்கப்படமுன் அதனை இரத்துச்செய்யும் உரிமை அவருக்கு உண்டு.

ஞாயிற்றுக்கிழமை K கொடைமுனைவினை ஏற்றபோது அது இரத்துச் செய்யப்பட்டு இருந்தமையால் அந்த ஏற்பு வலிதற்றதாகும்.
எனவே, Y மற்றும் K க்கு இடையில் வலிதான ஒப்பந்தம் ஏற்படவில்லை.

இதேபோன்ற விடயங்கள் Dickinson v Dodds (1876) 2 Ch. D. 463 இல் ஆராயப்பட்டது. இங்கு கொடைமுனையினை பெற்றவர் நம்பகமான மூலத்திலிருந்து கொடைமுனைவு இரத்துச்செய்யப் பட்டதனை தெரிந்திருப்பின் ஏற்பனவு வலிதற்றதென தீர்மானிக்கப்பட்டது.

(b)

| கற்கை வெளிப்பாடு: 2.2.1 |
|---|

(i)

நிபந்தனை ஒப்பந்தத்தின் ஆணிவேரான கட்டுறுப்பாக உள்ள அதேவேளை, உத்தவாதம் என்பது ஒப்பந்தத்தின் அடக்கத்தை பாதிக்காத ஒப்பந்தத்தின் முக்கிய கட்டுறுப்பு அல்ல.

“தனி முக்கியத்துவம்” (absolute essence) எனும் சொற்கள் இந்தச் சரத்து ஒப்பந்தத்தின் நிபந்தனையாக அமையவேண்டும் என்பதனை இரு தரப்பினரும் கருதியுள்ளனர் என்பதனை காட்டுகின்றது.

எனவே, ஐந்தாவது தவணைக் கொடுப்பனவை செலுத்துவதில் தாமதம் நிபந்தனை முறிவாகின்றது.

இதேபோன்ற விடயங்கள் Lombard North Central PLC v Buttersworth (1987) Q.B. 527 இல் ஆராயப்பட்டது. ஒப்பந்தத்தில் **உடனடிக் கொடுப்பனவு முக்கியமானது** என்பது ஒப்பந்தத் தரப்பினரால் ஒப்பந்தத்தில் ஒரு நிபந்தனையாக கருதப்பட்டதாக தீர்மானிக்கப்பட்டது. எனவே, தவணைக் கொடுப்பனவுகளில் தாமதம் ஒரு நிபந்தனை முறிவாகின்றது.

(ii)

விதிவிலக்குச் சரத்தின் பிரதான நியதி, ஒப்பந்தத்தின் அடிப்படைக் கடப்பாடுகளை அல்லது தரப்பினரின் அடிப்படைப் பொறுப்புக்களை விதிவிலக்குச் சரத்து நீக்க முடியாது என்பதாகும்.

தரப்பட்ட சந்தர்ப்பத்தில் உரியகாலத்தில் தவணைக்கொடுப்பனவுகளை மேற்கொள்வது ஒரு நிபந்தனை ஆதலினால், அது ஒப்பந்தத்தின் கீழ் சுகைரின் (Z) அடிப்படைப் பொறுப்பாகும்.

எனவே, விதிவிலக்குச் சரத்தினை அறிமுகப்படத்துவதன் மூலம் Z இந்தப் பொறுப்பிலிருந்து விலக முடியாது.

**(மொத்தம்: 10 புள்ளிகள்)**



NOT FOR SALE

**விடை 04**

(a)

| கற்கை வெளிப்பாடு: 3.3.1 |
|---|

இதனைப் போன்ற சம்பவம் கீழ்வரும் வழக்கில் ஆராயப்பட்டது:

<u>வழக்கின் பெயர்:</u>

### Kirham v Attenborough (1897) 1 Q.B. 201

<u>வழக்கின் விடயங்கள்:</u>
K சில தங்க ஆபரணங்களை "விற்பனை செய் அல்லது திருப்பி அனுப்பு" (sale or return) எனும் அடிப்படையில் W க்கு விநியோகித்தார். பின்னர் W அந்த ஆபரணங்களை A வங்கியில் அடைவு வைத்தார்.

<u>தீர்ப்பு:</u> W இனால் அடமானம் செய்யப்பட்டமை அந்த ஊடுசெயலை ஏற்றுக்கொண்டதாக குறிக்கின்றது. எனவே, ஆபரணம் மீதான உடமை W க்கு மாறியுள்ளது. எனவே, A யிடமிருந்து ஆபரணத்தினை K யினால் மீளப்பெற முடியாது.

"30 நாட்களுக்குள் விற்பனை செய் அல்லது திருப்பி அனுப்பு" எனும் அடிப்படையில் வாங்குனருக்கு பொருட்கள் விநியோகிக்கப்படும்போது, இந்தப் பொருட்கள் மீதான உடமை வாங்குனருக்கு மாறுவது:

- 30 நாட்கள் முடிவில் வாங்குனர் பொருட்களை தொடர்ந்து வைத்திருந்தால்; அல்லது
- பொருட்களை ஏற்றுக்கொண்டமையை வாங்குனர் தெரிவிக்கும்போது

தரப்பட்ட சந்தர்ப்பத்தில், B தமது ஏற்பினை V க்கு நேரடியாக தெரிவிக்காத போதிலும், XYZ வங்கியில் B சங்கிலிகளை அடைவு வைத்தமை அவர் அச் சங்கிலிகளை தன்னுடையதாக ஏற்றுக்கொண்டதனை குறிக்கின்றது.

எனவே, B வங்கியில் சங்கிலிகளை அடைவு வைத்தபோது அவற்றின் உடமை B க்கு மாறியது.

(b)

| கற்கை வெளிப்பாடு: 5.3.1 மற்றும் 5.3.2 |
|---|

(i)

முதல்வர் என்ற ரீதியில் R இனது முகவர் P க்கான பிரதான கடமைகள் கீழ்வருமாறு:

- முகவருக்கு பணிசை அல்லது ஊதியம் வழங்குதல்.
- முகவரால் மேற்கொள்ளப்படும் சட்டரீதியான செயற்பாடுகளுக்கும், தமது அதிகாரங்களை நிறைவேற்றும்போது ஏற்படும் பரிப்புக்களுக்கும் இழப்பீடு செய்தல்,

(ii)

முகவர் என்ற ரீதியில் P இனது முதல்வர் R க்கான பிரதான கடமைகள் கீழ்வருமாறு:

- தமது கடமைகளை மேற்கொள்ளும்போது உரிய அக்கறை (due diligence) செலுத்தி, தாம் கொண்டுள்ள விசேட திறமையை பிரயோகித்தல்.
- தேவையான இடத்து கணக்குக் காட்டுதல்.
- தமது தொழில் வழங்கனருக்கு எதிராக முதல்வராக மாறாதிருத்தல்.
- முதல்வரின் அறிவுரைகளின்படி நடத்தல்.
- தமது அதிகாரத்தை பிறருக்கு ஒப்படைக்காது இருத்தல்.
- முதல்வரின் அந்தரங்கத் தகவல்களை வெளியிடாது இருத்தல்.
- முதல்வரின் விருப்பத்திற்கும் நன்மைக்கும் செயற்படுதல்.
- இரகசிய இலாபம் உழைக்காதிருத்தல்.

**(மொத்தம்: 10 புள்ளிகள்)**

NOT FOR SALE

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA

## பொறுப்பு மறுத்தல் அறிவித்தல் - Notice of Disclaimer

இந்த விடைகள் முற்றுமுழுதாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தால் (CA Sri Lanka) தரப்பட்டுள்ளதுடன், இவற்றை மாதிரி விடைகள் என்ற அடிப்படையிலேயே நீர் ஏற்றுக் கொள்கின்றீர்.

இவை மாதிரி விடைகளாக கருதப்பட வேண்டுமே தவிர சரியான / எதிர்பார்த்த விடைகளாக அல்ல.

இந்த விடைகள் இரண்டு அடிப்படை நோக்கங்களை கொண்டுள்ளன. அவையாவன:

1. பரீட்சை வினா ஒன்றிற்கு மாதிரி விடைக்கான விபரமான உதாரணத்தை தருதல்ளூ அத்துடன்

2. பாடத்தில் மாணவரின் ஆராய்ச்சி மேற்கொள்ள அவர்களுக்கு உதவுவதுடன், பாடம் பற்றிய அவர்களின் அறிவு மற்றும் விளக்கத்தை அதிகரிக்க உதவுவதாகும்.

இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் இந்த மாதிரி விடைகள் தொடர்பில் எந்தவொரு உத்தரவாதத்தையும் தரவில்லை ஆதலினால், இது தொடர்பாக எந்தவொரு துயரையும் இந்த இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நீர் கொண்டுவருதல் அர்த்தமற்றது. எனினும், நீர் இது தொடர்பாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நடவடிக்கை, கோரிக்கை, வழக்கு, அச்சுறுத்தல் அல்லது கேள்வி எதனையும் எழுப்பி அதில் நீர் வெற்றிபெறாத இடத்து இதனால் நிறுவகத்திற்கு ஏற்படும் சட்டச் செலவுகள் மற்றும் எதிர் நடவடிக்கை தொடர்புபட்ட சகல செலவுகளையும் நீர் பட்டக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு நீர் செலுத்த வேண்டும். இதே விடயத்திற்காக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் அதன் இந்த உரிமையையோ அல்லது இதில் விபரிக்கப்பட்டுள்ள அல்லது இலங்கைச் சட்டங்களின் கீழான அதன் உரிமைகளையோ உறுதிப்படுத்துவதற்காக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள கட்டாயப்படுத்தப்படின், அதற்குரிய சட்டக் கட்டணம் மற்றும் செலவுகளை நீர் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு செலுத்த வேண்டும்.

---

© 2013 இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் (CA ஸ்ரீலங்கா).
முழுப் பதிப்புரிமையுடையது. இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் எழுத்துமூல முன் அனுமதியின்றி இந்த ஆவணத்தின் பகுதியினை மறுபிரசுரம் செய்வதோ அல்லது எந்த வடிவத்திலும் இலத்திரனிய, எந்திர, புகைப்படப் பிரதியிடல் பதிவுசெய்தல் மற்றும் ஏனைய ஊடகங்களினூடாக அனுப்புதலோ கூடாது.

---

NOT FOR SALE